மறக்கலாகா நினைவுகள்.

(ஸ்ரீ.உ. வே. C. பார்த்தசாரதி ஐயங்கார், காரியதரிசி)

காஞ்சி ஸ்ரீ. உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியுடன் பல அனுபவங்களில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

(1) காஞ்சி ஸ்ரீ. உ. வே. P B A ஸ்வாமி

''நீறு செவ்வே யிடக்காணில்
நெடுமாலடியார் என்றோடும்''
''திருவுடை மன்னரைக்காணில்
திருமாலைக் கண்டேனே''

என்கிற பாசுரப்படி கோஷ்டிக்கு எள்ளும் ஸ்வாமிகள் எப்போதும் பளிச்சென்று பன்னிரண்டு திருநாமத்துடன் ஸேவை ஸாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர். அவர் சொன்ன கதை: கலெக்டர், கவர்னர் வருங்காலத்து போலீஸ், மிலிடரி பாரேட் நடக்கும். அதற்கு ஒருநாள் முன்பு ரிஹர்ஸல் பாரேட் நடக்கும். அதன் தலைவர் பாரேட் செய்பவரில் சிலர் கன்னத்தைத் தடவிப்பார்ப்பர். சொர, சொர என்றிருந்தால் பளிச்சென்று கன்னத்தில் அறை விழுமாம். சாதாரண மனிதருக்கு அப்படி என்றால் நாம் தேவராஜாவின் பதாதிகள் (ஸைன்யம்) நாம் எப்படி இருக்கவேண்டும் என்று யோசி என்றார்.

(2) அருளிச்செயலை நன்கு அனுபவிக்கத் தெரிந்தவர்:

அங்கு மணவாளமாமுனிகள் ஸந்நிதியில் உரத்த குரலில், நிதானமாக ஸேவாகாலம் ஆரம்பித்துச் சிலரை அனுப்பி, இது எவ்வளவு தூரம் கேட்கிறது என்று பார்த்துவரச் சொல்ல, அவர்கள் வந்து ''மேல கோபுரவாசல் வரை'' கேட்கிறது என்றவுடன், இப்படியே பண்ணிக்கொண்டிருங்கள் என்று தாமே போய் அதை அனுபவிப்பர்.

(3) பொய், மெய்யைச் சுலபமாக அறிபவர்: பொய்சொல்லித் தப்ப முடியாது.

காஞ்சி வைசாகோத்ஸவத்தில் சென்று ஸ்வாமியைப் பாடசாலையில் ஸேவித்தேன்.

கேள்வி: பாச்சுவா? எப்போது வந்தாய்?

பதில்: நேற்று ராத்திரி வந்தேன்.

கேள்வி: மேற்கே கோஷ்டிக்குப் போனாயா?

பதில்: போனேன்.

கேள்வி: என்ன பாட்டு ஆரம்பித்தார்கள்?

பதில்: பாதி கோஷ்டியில் கலந்து கொண்டேன்.

கேள்வி: என்ன பாட்டு முடித்தார்கள்?

பதில்: நாச்சியார் திருமொழி 3ஆம் பதிகம் முடிந்தது. நாளை ''தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார்'' ஆரம்பிக்க வேண்டும்.

அவர் தீர்மானம்: ஆறும் திருநாள் என்று பதில் அப்படிச் சொன்னுயா?

வேலை வாங்குவதில் கெட்டிக்காரர்:

(4) யாரானும் சிறுவர் அவரிடம் சென்றால்:

இந்தக் கடுதாசியைத் தபால் பெட்டியில் போடு என்று கொடுப்பர். உடனே தபால் பெட்டியில் என்ன டைம் போட்டிருக்கிறது என்று வந்து சொல் என்று உத்தரவிடுவார்.

(5) அவருக்கு யானைக் கண்: பாம்புக் காது:

எத்தனை ஸ்வாமிகள் அணி அணியாகக்கூடி அலை அலையாகச் சென்றாலும் ஒருதரம் முதல் வரிசையிலிருந்து திரும்பிப் 'பார்த்தாரானால் யார் யார் 12 திருமண் இட்டுக்கொள்ளவில்லை என்று "சட்"டென்று சொல்லிவிடுவர்.

எவ்வளவு கூட்டத்தில் ஸேவா காலம் பண்ணினாலும் கூர்மையாய்க் கவனித்து, தப்பு சொல்பவரைக் கூப்பிட்டுத் திருத்தும் தன்மை உடையவர்.

(6) ஒருபெரிய பணக்காரர் இல்லத்திற்கு ஸேவாகாலத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அந்தக் காரில் அடியேனும் போனேன். கார் ஓட்டிச் சென்றவர் தாம் ஸித்தமாயிருப்பதற்காகத் திரும்புவது எத்தனை மணிக்கு என்று கேட்டார். அதற்கு அவர் பதில் "என் உயிர் அவன் கையதே" "அவன் கையதே எனதாருயிர்" (திருவாய்: 9-5-2, 3) அவர் விட்டபோது தான் வர முடியும். எல்லோரும் சிரித்தனர்.

(7) 30 வருடம் முன்பு ஓங்கோல் அருகே கொத்தப்பட்டணம் என்கிற இடத்தில் திருப்பதி ஸ்ரீ. உ. வே. யாமுனாசார் ஸ்வாமி நடத்திவைத்த பெருமாள் ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷணத்திற்குச் சென்றிருந்தேன். வேத அத்யாபக ஸ்வாமிகளுக்குக் கையில் கங்கணம் கட்டி, மஞ்சளில் நனைத்த வேஷ்டி உத்தரீயம் கொடுத்து எல்லாவேளைகளிலும் அதையே தரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டனர். அது தேசாசாரம். அப்படியே செய்தோம்.

மறுநாள் காலை ஸ்ரீ. உ. வே. PBA ஸ்வாமி ஏள்ளினர். எங்கள் மத்தியில் நின்றுகொண்டிருந்த வயதான காஞ்சி மடவிளாகம் கோபாலாசாரியரைக் கூப்பிட்டு அவ்வளவு கூட்டத்தின் மத்தியில் மஞ்சள் துணியும், கங்கணமும் பூண்ட ஸேவையுடன் இருக்கிறீரே, தேவள் ஆத்துக்காரி வந்திருக்காளா? நான் உங்கள் கல்யாணத்தில் பார்க்கவில்லை. இப்போது பார்க்கலாம் என்று நினைத்தேன் என்று சிரிக்க வைத்தார். கோபாலாசார் ஸ்வாமி நேற்றையதினம் நீர் வந்திருந்தால் உமக்கும் அந்த மஞ்சள் துணி கொடுத்திருப்பார்கள். ஒருநாள் தள்ளி வந்தீரே என்று பதில் சொல்லி எல்லோரையும் சிரிக்கவைத்தார்.

(8) 20 வருடம் முன்பு மன்னார்குடி அண்ணாஸ்வாமி ஐயங்கார் ஸதஸ்ஸுக்கு முதல் தடவை சென்றிருந்தேன். அங்கு நிறைய ஸ்வாமிகள் குழுமியிருந்தனர். திவ்ய ப்ரபந்த பரீக்ஷைக்கு ஆரம்பிக்கச் சொன்னார்கள். பரீக்ஷகர் ஸ்ரீ.உ.வே. எம்பார் திரு வேங்கடாசாரியர் ஸ்வாமி. [திருமாகூர் தீர்த்தகாரர். ஜீயர்பிள்ளை சீமைச் என்றால் ப்ரபலமாகத் தெரியும்.] அப்போது தர்க்கம், வியாகரணம் பரீக்ஷ

க்ராகக் காஞ்சி PBA ஸ்வாமி ஏள்ளின தால் அவரையே திவ்யபிரபந்த பரீக்ஷயை நடத்தச் சொன்னார்கள். அவரும் சம்மதித்து வித்யார்த்தியாய் வந்திருந்தவரைக் கேட்டார்.

கேள்வி ; உமக்கு என்ன தெரியும்?

பதில் : எல்லாம் தெரியும்,

கேள்வி: சொல்லும் 'பல்லாண்டு பல்லாண்டு'

பதில்: 'பல்லாண்டு பல்லாண்டு'

கேள்வி: வண்ணமாடங்கள்

பதில்: வண்ணமாடங்கள்

கேள்வி: கதிராயிரமிரவி

பதில்: கதிராயிரமிரவி

கேள்வி: 'தையொரு திங்களும்'

பதில்: 'தையொரு திங்களும்'

கேள்வி: பூநிலாய

பதில்: பூநிலாய

கேள்வி: வாடினேன் வாடி

பதில்: வாடினேன் வாடி

கேள்வி: ஒழிவில்காலம்

பதில்: ஒழிவில்காலம்

கேள்வி: உலகமுண்டபெருவாயா

பதில்: உலகமுண்டபெருவாயா

வித்யார்த்தி மேலே ஒரு பதம்கூட சொல்லாமல் திகைத்து இவர் சொன்னதையே சொன்னார். ஸ்வாமி மேலே சொல்லு என்று,

கேள்வி: 'சொன்னால் விரோதமிது'

பதில்: 'சொன்னால் விரோதமிது'

கேள்வி: 'சொல்லமாட்டேன் அடியேன்' (திருவாய் : 8-5-5)

பதில்: 'சொல்லமாட்டேன் அடியேன்'

காஞ்சி அண்ணஸ்வாமி எப்படி முடித்தார் தெரியுமா?

"எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்! எம்பெருமான் நீ எழுந்தருளே. (பெருமாள் திரு : 6-67) 'உமக்கொன்று சொல்லுகேன் கேண்மின்' உமக்கிங்கோர் பற்றில்லை கண்டீர் நடமின்' (பெரியாழ் திரு : 5-2-6.) என்று ஸ்வாமி ஸாதிக்க எல்லோரும் கை கொட்டிச் சிரித்தனர். அந்த வித்யார்த்தி தலை குனிந்து எழுந்து போனார்.

இன்னொருவரைப் பார்த்து "உண்டே" பாட்டு சொல்லு என்றார். அவர் முழித்தார். உடனே அடியேனைப் பார்த்து "பாச்சு, நீ சொல்லு" என்றார். முதலில் பயந்தேன். ஞாபகத்துக்கு வந்தது. சொன்னேன்,

"நாவாயிலுண்டே நமோ
நாரணவென்று
ஓவா துரைக்கும் உரையுண்டே—
மூவாத
மாக்கதிக்கண் செல்லும்
வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லுந்திறம்?"

"சொல்லிவிட்டாயே" என்று சந்தோஷித்துச் சிரித்தார்.

கேள்வி: நாலாயிரத்தில் எத்தனையிடத்தில் 'முண்டே' என்று வருகிறது என்றார்.

பதில்: பயத்துடன் இரண்டு இடத்தில் வருகிறது என்றேன்.

கேள்வி: பாட்டைச் சொல்லு

பதில்: (1) "எங்கானு மீதொப்ப தோர் மாயமுண்டே" (பெரிய திருமொழி : 10-6-11, (2) "மற்று மோர் தெய்வமுண்டே" [திருமாலை -9.]

நீ 'பாஸ்' எழுந்துபோகலாம் என்றார்.

அடுத்தவரை எந்த ஊர்? என்று கேட்டார். 'ஆள்வார்திருநகரி' என்றார். உடனே அவர்களுக்கு 'ழ' வராதே என்றும். திருவாய்மொழியைத் 'திருவாய்மொளி' என்பார் என்று சொல்லிப் பிறகு அவரைக் கேட்ட கேள்விகள்:

கேள்வி: 'ஏழை ஏதலன்'

பதில்: 'ஏளை ஏதலன்'

கேள்வி: ஆழியெழ

பதில்: 'ஆளி எள'

கேள்வி: ஊழிதோறூழி

பதில்: 'ஊளிதோரூளி'

கேள்வி: தாளிணை வாழியே

பதில்: 'தாளிணை வாளியே'

இது முடிந்ததும் ஸ்வாமி தர்க்கம் பரீக்ஷைக்குப் போனார்.

(9) திருவல்லிக்கேணி வேத வேதாந்த வர்த்தனி வருடாந்தர கொண்டாட்டத்தில் கடைசி தினம், மாஜி நீதிபதி ஸ்ரீ. உ. வே. P. M. ஸ்ரீனிவாஸ ஐயங்கார், காஞ்சி ஸ்வாமி 'ஆயிரத்தில் ஒன்று' என்ற விஷயத்தைப்பற்றி உபன்யஸிப்பார் என்று முடித்தார். நல்ல கூட்டம். எல்லோரும் PBA ஸ்வாமி என்ன சொல்லப் போகிறார் என்று திகைத்தனர். எதிரில் உட்கார்ந்திருந்த ஒரு சிறு பையனை "ஆயிரத்தில் ஒரு நம்பர் சொல்லு" என்று நியமித்தார். உடனே அவன் 798 என்று சொன்னான். ஸ்வாமி "கஷ்டமான நம்பரைச் சொல்கிறாயே" என்று சொல்லிவிட்டுச் சட்டென்று முறையே முதலாயிரம். பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி ஆகிய ஒவ்வொன்றிலும் 798-வது பாட்டின் சாராம்சத்தை இரண்டு மணி காலம் அமுத மழையாய்ப் பொழிந்தார், (798-வது பாட்டைக் கணக்குப்பண்ணி எடுக்கும் திறமை புலப்படுகிறது.) முதலாயிரம்: திருச்சந்த விருத்தம் (47) 'காரொடொத்த மேனி எங்கள் கண்ணன்'; பெரிய திருமொழி: [8-10-8] "மாணாகி வையம் அளந்ததுவும்"; இயற்பா [பெரியதிருமடல் 130] "அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை": திருவாய்மொழி [8-3-4] ஞாலம் போனகம்பற்றி ஓர் முற்றுவுருவாகி,

(10) ஒரு சமயம் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் காலக்ஷேபம் நடந்தது. கூட்டமான கூட்டம். மடம் நிரம்பிக் குளத்துப்படியிலும் அமர்ந்து கேட்டனர். காஞ்சி ஸ்வாமி 2½ மணி காலம் பிரஸங்கம் நடந்தும் முடியவில்லை. சளைக்கவில்லை வேதம், திவ்யபிரபந்தம், ஆசார்யாள் வியாக்யானம், பகவத்கீதை என்று தாவிக்கொண்டிருந்தார்.

நிர்வாகிகள்,—ஸ்வாமி மாத்திரம் காலை மாற்றாமல் இவ்வளவு நாழிகை

உபன்யஸித்ததே தவிர மற்ற எல்லோ ரும் 20 தடவை காலே மாற்றிவைத்து, தூக்கக் கலக்கத்தில் உள்ளார்கள், உபன்யாஸத்தைமுடிக்கலாமே என்று ப்ரார்த்திக்க, ஓஹோ! எழுப்பும் மந் திரம் சொல்ல வேண்டுமா என்று ''ஓம் இத்யேகாக்ஷரம்'' என்று வேதம் ஓதும் பாணியிலே உரக்க

''ட த் ஏகாக்ஷரம் காபி இதி த்வே அக்ஷரே ஓவல்டின் ஏதி பஞ்சாக்ஷ ராணி'' என்றார் வேடிக்கையாக. உடனே எல்லோரும் புத்துணர்ச்சி யுடன் சிரித்தனர். நான் சொன்னதில் ஏதேனும் தப்பு உண்டோ?

ட த் ஏகாக்ஷரம்: ட என்பது ஒரு அக்ஷரத்தாலானது காபி இதி த்வே அக்ஷரே: கா.பி. என்பது இரண்டு அக்ஷரத்தாலானது. ஓவல்டின் ஏதி பஞ்சாக்ஷராணி: ஓ,வ,ல்,டி,ன் என் பது ஐந்து அக்ஷரத்தாலானது. பலத்த சிரிப்புடன் கைதட்டினர். எல்லோரும் விழித்துக்கொண்டனர். இன்னும் 2 மணி காலம் உபன்யாஸம் சொல்லலாம் என்று தொடர்ந்தார். ஐந்துமணி காலம் சொன்னாலும், தனது காலே ஒருதரம்கூட மாற்றி வைத்துக்கொள்ளவே மாட்டார்.

(11) அவர் உபன்யாஸங்களில் வேதம் தெரிந்தவர், திவ்யப்ரபந்தம் தெரிந்தவர் வந்தார் என்று தெரிந்தால் போதும்: நடுவில் அவர்களைக் கூப் பிட்டு 'இது எங்கே வருகிறது? அந்தப் பஞ்சாதியைச் சொல்' என்று சபை யிலேயே கேட்பர். ஆகவே, அவர் உபன்யாஸத்தில் வருவதற்கே எவரும் பயப்படுவர்கள். சரியாகச் சொன்னால் போச்சு. இல்லேயேல் சபை மத்தியில் பரிஹஸிப்பர்.

(12) காஞ்சியில் ஸ்ரீ. உ. வே. காதி க்ருஷ்ணமாசாரியர் சதாபிஷே கம் நடந்தது. அந்தக் கோஷ்டியில் மாமண்டூர் க்ருஷ்ணமாசார் ஸ்வா மிக்கு ஸம்பாவனே கொடுக்கும்போது ''இந்த ஸ்வாமி உரத்த குரலில் ஸேவாகாலம் செய்வர். தப்பாக இருந் தாலும் உரக்கவே சொல்வர்'' என்று சபை மத்தியில் கிண்டல் செய்தார். எதற்கும் பயப்படாதவர்.

(13) திருக்கண்ணபுரம் சௌரிப் பெருமாள் ஸம்ப்ரோக்ஷணக்குச்சென் றிருந்தேன். ஸ்ரீ PBA ஸ்வாமி எல்லா நாளும் கோஷ்டியில் அன்வயித்து உபன்யாஸமும் ஸாதித்தார். சாரி சாரியாக 600 ஸ்வாமிகள் யாகசாலேக் குள் நுழையும்போது ஒருவர் PBA ஸ்வாமியை ''தேவள் எல்லா இடங் களுக்கும் ஏள்ளுகிறதே, அந்த ஸ்வாமி கள் யார் யார் என்று தெரியுமா?'' என்று கேட்க, அவர் பதில் ''இன்னா ரென்றறியேன்'' (பெரிய திரு: 10.10.9.) என்றார். அங்கு 5–ஆம் திருநாள் — காஞ்சி ஸ்வாமி உபன் யாஸம். இடையில் அவர் ஸாதித்த விஷயம். ''இங்கு யாகசாலே நிர்வாகம் ஸ்ரீவில்லிபுத்தூர் அலங்கார பட்டர் ஸ்வாமியுடையது. பெரு மாளோ சௌரிப்பெருமாள். சௌரி யில் உயர்ந்த பரிமளமான புஷ்பங் களேச் சாத்திக்கொண்டிருக்கிறார்: அந்த ஊரே மணக்கும்படி அவ்வளவு வாஸனே மூக்கைத் துளைக்கிறது. ஆனால் ஐந்துநாளாய் இரண்டுவேளே ப்ரதி தினமும் பெருமாள்கிட்ட ஸேவைபண்ணிவைத்தார்கள். ஆனால் அடியேன் கையில் கிடைத்தது துளசி தான். ஒரு புஷ்பம்கூட இல்லே. இதன்

ரகசியம் அலங்காரபட்டரைக் கேட்டால் தெரியும் என்ருர். அதோடு நிற்கவில்லை. சில புஷ்பங்கள் சிலருக்குச் சொந்தம். நம்மாழ்வார் திருவாய்மொழி (1-9-7) இல்

''தோளிணைமேலும் நன்மார்பின்
மேலும் சுடர்முடி மேலும்
தாளிணைமேலும் புனைந்த
தண்ணந்துழாயுடையம்மான்''

என்று பாடியுள்ளார். அதில் தோளின் மேல் சாத்தின புஷ்பங்கள் உபயகாரர்களுக்குச் சொந்தம்; மார்பின்மேல் சாத்தின்வை பாதி உபயகாரர்களுக்கும், பாதி தர்மகர்த்தர்களுக்கும் சொந்தம். சுடர் முடிமேல் சாத்தினவை அர்ச்சகர்களுக்கே சொந்தம். தாளிணைமேல் புனைந்த தண்ணந்துழாய் நம்போன்ற பக்தர்களுக்குச் சொந்தம். ஆகையால்தான் நல்ல புஷ்பங்கள் எதுவந்தாலும், எந்த ஊரிலும் அர்ச்சகர்கள் உடனே திருமுடியில் சாத்துகிருர்கள்போலும் என்று சொல்லி, அலங்காரபட்டரே! இது உண்மைதானு? என்றவுடன் பலத்த கரகோஷம்.

PBA ஸ்வாமி தங்குவதற்குத் திருக்கண்ணபுரத்தில், ஸந்நிதியின் பக்கம், திருமங்கை மன்னன் ஸந்நிதியின் பக்கத்துக் கிருஹத்தில் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஒருவர் ஸ்வாமியை எங்கு இறங்கியிருக்கிறீர்? என்று கேட்டார். அதற்குப் பதில் ''இறங்கரது என்ன? யானை, குதிரை துரக பதாதிகளுடன் வந்திருக்கிறேனு'' என்று சிரிக்கவைத்தார்.

அந்த ஸ்வாமியின் கேள்வி—மத்தியானம் நட சாந்தி திருமஞ்சனத்திற்கு வில்லை? என்று கேட்டார். பின்புறம் இருக்கிறேன். தெரியவில்லை. காலை விச்வரூப அவசரத்தில் தோசை அமுது செய்கிரு ''டவண்டை'' என்ற வாத்தி யுடன் திருமங்கை மன்ன ஸந்நிதிக்கு வருவது ஒன்றுதா கிறது என்றும், அதற்கப்பு ருக்கு ஒன்றுமே வருவது தெரி என்றும் கூறி. ஆகையா திருமங்கை மன்னன் இத் அனுபவிக்கும்போது [பெரி மொழி 8-5-7]

''ஆயன், விலங்கல் வேயின
தோசை

இனி விளைவதொன்றறியே என்ருர் போலும் என்று எல் யும் சிரிக்கவைத்தார்.

தம் உபன்யாஸத்தில் ''ம ஞல் வைகுந்தம் கொடுக்கும் பி என்பதாலோ என்னமோ, பெ விமானம் வெளியிலிருந்து தெ வாறு இங்கு ஸந்நிதி மதிளை அ துள்ளார்கள். ஆனுல் இங்குள் மங்கை மன்னன் ஸந்நிதி மேல் தின்ன்று பார்த்தால் மாத்திரம் மாள் விமானம் ஸேவை ஆ என்று சொல்லிச் சிரிக்கவைத்தா

(14) ஸ்ரீரங்கம் பெரிய மாள் ஸம்ப்ரோக்ஷணை. ஸேவாக முடிந்து வெளியில் என் கை பிடித்துக்கொண்டு வந்தார். ச

தாழ்வார் ஸந்நிதி முன்பு உபன்யாஸம் எங்கும் ஒலிபெருக்கிவைத்து நடந்தது. உபன்யாஸகர் பெரியவாச்சான் பிள்ளை இப்படி ஸாதித்திருக்கிறார் என்று சொன்னது காதில் விழுந்தது. உபன்யாஸம் சொல்வது யார்? என்று கேட்டு, அங்கே போகலாம் என்று சொல்லி அவர் உடனே மேடையை நோக்கிச் சென்றார். அவரும் இவரை வரவேற்றார். அந்த ஒலிபெருக்கியில், ''நிஜமாகவே இப்படித்தான் ஸாதித்தாரா? ஸ்ரீரங்கம் பெரிய திவ்யதேசமாச்சுதே! பல வித்வான்கள் வந்திருப்பார்களே? என்கிற பயம்கூட இல்லாமல் சொல்கிறீரே'' என்று கேட்டார். அதற்கு ''புத்தகத்தில் அப்படிப் பார்த்ததாகத்தான் ஞாபகம்''என்றார். உடனே ஒருவரைத் தெற்கு வாசலில் நாதெள்ள சத்திரத்தில் தான் தங்கியிருக்கும் ரூமில் உள்ள அலமாரியில் நடுத்தட்டில் வலது பக்கத்திலிருந்து 8-வதும் இடது பக்கத்திலிருந்து 7-வதுமாக உள்ள புத்தகத்தைக் கொண்டுவரச்சொல்லி அதில் 184-ஆம் பக்கம் எடுத்து அவரையே படிக்கச் சொன்னார். அதைப் படித்து விட்டு உபன்யாஸகர் திகைத்தார். உள்ளதை உள்ளபடியே சொல்லும். ஏறிட்டுச்சொல்லி ஆசார்யர்கள் விஷயத்தில் அபசாரப்படக்கூடாது என்றார். அவரும் அவரைத் 'திருத்தியது நல்லது, இல்லையேல் இப்படியே தப்பை உளறிக்கொண்டிருப்பேன்' என்று சொல்லும்வரை விடவில்லை.

(15) பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபாவில் ஒரு ஸ்வாமி ராமாயணம் சொல்லிவந்தார். அதன் பூர்த்தியன்று காஞ்சி PBA ஸ்வாமியை வரவழைத்தனர். அதில் மேற்படி உபன்யாஸகர் ஆரம்பநாள் முதல் கடைசி நாள்வரை எத்தனை இடங்களில் வால்மீகி, ராமாயணத்தை ஒட்டியும், கம்பராமாயணத்தை ஒட்டியும், ஆழ்வார்கள் கண்ட ராமாயணம் ஒட்டியும் இல்லாமல் தன்னிஷ்டப்படி சொல்லியிருக்கிறார் என்பதை விரிவாகச் சொல்லி, ராமாயணம் சொல்லி வந்தவருக்கு இடம் கொடாமல் ''சம்பாவனையை அவருக்குக் கொடுங்கள். நானே சீதா கல்யாணத்தைச் சொல்லிவிடுகிறேன்'' என்று கூறி எல்லோரையும் திகைக்கச் செய்தார்.

(16) சமீபத்தில் நடந்த காஞ்சி தேவப்பெருமாள் ஸம்ப்ரோக்ஷணம் கடைசிநாள் சென்று அவர் கண்ணில் படக்கூடாது என்று கோஷ்டி கடைசியில் நின்றிருந்தேன். பாச்சுவா, இங்குக் கூப்பிடு என்று ஏவ, உடனே அவரிடம் சென்றேன். ஏன் இப்படிக் கடைசிநாள் வந்தாய். பெரியாழ்வார் ஸாதித்தபடி ''குளித்திருந்த கணக்காமே'' என்றபடி, கணக்குப்பண்ண வந்தாயா என்று கேட்டது மனதில் பச்சென்றிருக்கிறது.

இங்ஙனம், பாரததேசத்தின் வைணவப் பேரியக்கத்திற்கொருவராய் விளங்கிய அனுபவம் நிறைந்தவரும், ஐந்து பாஷைகளில் உபன்யாஸம் செய்யக்கூடிய திறமை பெற்றவரும், காஞ்சி தேவப்பெருமாள் திருவீதி இயல்கோஷ்டியில் ஒரு நிமிடமும் பிரியாது கைங்கரியத்தை மிக்க ஊக்கத்துடனும், சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் தமது தள்ளாத 94-ஆவது பிராயத்திலும் கடைசிவரை முன்னதாகவே எழுந்தருளிக் கைங்கர்யம் எப்படிச்செய்யவேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவரும் ஆகிய நம் ஸ்வாமி 21—6—83 அன்று ஆசாரியன் திருவடியையடைந்தது வைணவத்திற்கும் பேரருளாளனுக்கும் பேரிழப்பேயாகும். அவர் காட்டிய வழிகளைப் பின்பற்றி நடக்கவும், அவரெழுதிய நூல்களைப் பயன்படுத்திக்கொள்ளவும், மற்றும் வைணவம் தழைக்க எல்லாவகைகளிலும் அவர் பாடுபட்டதுபோல் பாடுபடவும் நாம் உறுதிகொள்ளவேண்டும்.

வாழ்க அவர் புகழ்;

வளர்க அவர் தொண்டு.